1974 சனவரி 25]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரசு தொகை வழங்குவதில்லை. சத்திரத்திலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்து உலுப்பைத் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. உலுப்பைத் தொகை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்ற விவரம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் இது இயங்கி வருகிறது.

சின்னமருதூர் கிராமத்தில் நில ஆக்கிரமிப்புகள்

*174 வினா—**திரு. மு. பழனிசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வெள்ளக்கோயில் தொகுதி, மூலனூர் வட்டாரம், சின்ன மருதூர் கிராமம், போதூரில் க.ச. 210 புறம்போக்கு நிலம் எத்தனை ஆண்டுகளாக யாருடைய ஆக்கிரமிப்பில் இருக்கிறது?

(இ) அந்த நிலத்துக்கு பட்டா கேட்டு யாராவது விண்ணப்பம் செய்துள்ளார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

(அ) சின்னமருதூர் கிராமத்தில் 210 ஆம் சர்வே எண்ணில் உள்ள 2.35 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் 1377 பசலி வரை ஏறத் தாழ 14 ஆண்டுகளாக திரு. கருப்பண்ண கவுண்டரின் ஆக்கிர மிப்பில் இருந்தது. 1378 பசலியிலிருந்து 1383 பசலி வரை அந்த நிலம் திரு. பழனிசாமி கவுண்டரின் ஆக்கிரமிப்பில் இருந்து வந்துள்ளது.

(இ) அந்த நிலத்தை ஒப்படை செய்யுமாறு கேட்டு மூவர் விண்ணப்பித்தனர்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: இப்படி வசதி படைத்தவர்கள் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு பல் வேறு இடங் களிலே அந்த நிலங்களை விடுவதற்கு மறுக்கிறார்கள். அரசாங்கம் ஏதாவது பொது விதி ஏற்படுத்தி, இந்த நிலங்களையெல்லாம் பிடுங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கெனவே விதிமுறைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில், திரு. கருப்பண்ண கவுண்டர் என்பவர் 14 ஆண்டுகளாக இதை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார். அதற்குப் பிறகு திரு. பழனிசாமி கவுண்டர் ஆக்கிரமிப்பில் இது இருந்தது. திரு. பழனிசாமி கவுண்டர் பட்டா கொடுக்கவேண்டும் என்று கேட்டார்கள். அதைப் பரிசீலித்த பிறகு பழனிசாமி கவுண்டர் வசதி படைத்தவர் என்றும், பணக்காரராகிய அவருக்குக் கொடுப்பதற்கில்லை என்று கூறப்பட்டுவிட்டது. கருப்பண்ண கவுண்டரும், மற்றும் இரண்டு பேர்களும் விண்ணப்பம் செய்தார்கள். கருப்பண்ண கவுண்டர் பழனிசாமி கவுண்டரிடம் பண்ணையாள். இது பற்றி பரிசிலனை செய்து, பண்ணையாள் பேரில் வாங்கிக் கொண்டு பழனிசாமி கவுண்டர் உரிமை கொண்டாடுவார் என்று அதுவும் மறுக்கப்பட்டது. திரு. பொன்னுராஜ் என்ற அரிசனனுக்கு அந்த நிலத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கருப்பண்ண கவுண்டர் வேறு இடத்தில் கொடுத்தால் போதும் என்று எழுதிக் கொடுத்து விட்டார். பழனிசாமி கவுண்டருக்கும் கிடையாது. கருப்பண்ண கவுண்டருக்கும் கிடையாது. பொன்னுராஜ் என்ற அரிசனனுக்குக் கொடுப்பதற்கு குறிப்பு இருப்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை நிர்வாகம்

*175 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் கூட்டுறவுத்துறையின் நிர்வாகம் புதிய முறையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) ( ) 1—9—1972 முதற்கொண்டு, நிலவள வங்கிகளின் துணைப்பதிவாளர்கள், துணைப்பதிவாளர்கள் (மும்முரவேளாண்மைப் பகுதித்திட்டம்) ஆகியோரது அதிகார வரம்புப் பகுதியை ஒன்றாக இணைத்து வட்டத் துணைப்பதிவாளர்களது அதிகார வரம்புப் பகுதி திருத்தியமைக்கப்பட்டுள்ளது.